# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு III – 2018 / 2019

## பகிரங்க சர்வதேசச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

**நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடைதருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. "அரச சம்மதம் என்பது, சர்வதேசச் சட்டம் உருவாக்கப்படுகின்ற எல்லா நேரங்களிலும் எல்லா அரசுகளும் அவற்றின் சம்மதத்தினை வழங்குதல் வேண்டுமென்பதனைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டுவதாகமாட்டாது; பெரும்பான்மையான அரசுகளினது சம்மதம் வழக்கமாகப் போதுமானதாகும். சில நிலைமைகளில் மாத்திரம் அரசுகளின் சம்மதமானது மிக முக்கியமனதாகவிருப்பினும், சர்வதேசச் சட்டத்தின் ஏனைய சில அம்சங்களுக்கு அது நடைமுறையில் பொருத்தமற்றதாகும் என்றும் விவாதிக்கப்படமுடியும்."

   பொருத்தமான உதாரணங்களின் ஆதரவுடன் மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

2. 'சர்வதேச விதிகள் மற்றும் நெறிமுறைகள் என்பன சில சந்தர்ப்பங்களில் காணப்படாமை, எதிர்க்கப்படுகின்றமை அல்லது நடைமுறைப்படுத்தப்படாமை என்பவற்றினாலான சர்வதேச முறைமையின் சமகால தெளிவின்மை காரணமாக அரசுகள், அரசுசாரா அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பயனடைவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.'

   சர்வதேச மட்டத்திலுள்ள வேறுபட்ட செயற்பாட்டாளர்களை இனங்கண்டு, சர்வதேசச் சட்டத்தின் குறைந்தபட்சம் ஒரு விசேட பரப்பினையாவது தெரிவுசெய்து, அத்தகைய செயற்பாட்டாளர்கள் மீதான சர்வதேசச் சட்டத்தின் நெறிமுறைகள் மற்றும் தராதரங்களின் பிரயோகத்தை நுணுக்கமாக ஆராய்க.

3. யாசியான் என்ற அரசானது, 1965இல் அது சுதந்திரம் பெற்றதிலிருந்து, சர்வதேச உடன்படிக்கைகளைச் சுதந்திரமாகச் செய்துவந்துள்ளதுடன், சர்வதேச அரங்குகளில் சர்வதேச நெறிமுறைகள் மற்றும் தராதரங்கள் என்பவற்றுக்கும் அரசாங்கமானது வெளிப்படையாகவே ஆதரவளித்து வருகின்றது. ஆயினும், யாசியானின் சட்டமுறைமையின் கீழ் உள்நாட்டுச் சட்டத்தினுள் சர்வதேசச் சட்டமானது எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது தெளிவற்றதாக இருப்பதுடன், இவ்விடயம் தொடர்பாக சட்டவாக்கசபை மற்றும் நீதிமன்றத்தின் நடைமுறைகளானவை மிகவும் உறுதியற்றவையாகவும் காணப்படுகின்றன. இக்குழப்பநிலையின் காரணமாக சர்வதேச அரங்குகளில் யாசியான் அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டின் நடைமுறைப் பெறுமானம் தொடர்பில் கடுமையான சந்தேகங்கள் காணப்படுகின்றன.

சர்வதேச சமூகம் மற்றும் நாட்டிலுள்ள சட்ட மறுசீரமைப்புத் தொடர்பில் செயற்பட்டுவருகின்ற உள்ளூர் குடியியல் சமூக அமைப்புக்கள் ஆகிய இரண்டும், சர்வதேசக் கடப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பன தொடர்பாகப் பின்பற்றப்பட வேண்டிய செயன்முறைகளைத் தெளிவுபடுத்துமாறு அரசாங்கத்தை வேண்டுகின்றன. யாசியான் நாட்டின் எதிர்கால நிலைப்பாடு எவ்வாறிருத்தல் வேண்டுமென்பது தொடர்பான கருத்துக்களை பொதுமக்களிடமிருந்து சமர்ப்பணங்களாக தேசிய சட்ட ஆணைக்குழு கோருகின்றது.

யாசியான் அரசு சர்வதேசச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அக்கறை கொண்டுள்ள இளம் சட்டக்கல்வியலாளர் என்று உம்மைக் கருதிக்கொள்க. உமது அக்கறைகளுக்கு பதிலளிக்கின்ற வகையில் அவசியமான சட்ட மறுசீரமைப்புக்களைச் செய்ய வேண்டிய வழிமுறைகள் மற்றும் வழிவகைகள் தொடர்பிலான தெளிவான பரிந்துரைகளைச் செய்கின்ற பத்திரமொன்றை எழுதுக. உமது பத்திரமானது கோட்பாடு மற்றும் நடைமுறை அம்சங்கள் இரண்டினதும் பகுப்பாய்வை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

4. (அ) மற்றும் (ஆ) ஆகிய <u>இரண்டுக்கும்</u> விடைதருக.

(அ) தீவு நாடொன்றான ஈஸிலாந்து என்பது சோமியானா என்ற சமுத்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததோர் இடத்திலமைந்திருப்பதுடன், உள்நாட்டு பிரிவினைவாத இயக்கமொன்றினால் ஏற்பட்ட தசாப்தகாலங்களாக நீடித்ததோர் உள்நாட்டுக் குழப்பத்திற்குப் பின்னர், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டிலும் மீண்டுவருகின்றது. அண்மையில், பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான குறிப்பான விடயங்களில் ஈஸிலாந்துவுக்கும் ஆனோட்டிகா என்ற அரசுக்கும் இடையில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையின் வாசகம் 6 பின்வருமாறு கூறுகின்றது:

> *"எதிர்பார்க்கப்பட்ட அல்லது உள்ளார்ந்த ஆற்றலுடைய அவசர நெருக்கடி நிலைமையின் போது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட முகவர்கள் தமது ஆள்புலத்திற்குள் சுதந்திரமாக நுழைவதனை அனுமதிப்பதற்கு கட்சிக்காரர் உடன்படுவதுடன், அத்தகைய நுழைவானது ஏதேனும் மேலதிகத் தேவைப்பாடுகளை அவசியப்படுத்தமாட்டாது. அத்தகையதோர் அவசர நெருக்கடி நிலைமையின் போது, கட்சிக்காரர்களின் அல்லது அவர்களின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட முகவர்களின் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை, தேசிய நீதிமன்றங்கள் அல்லது வேறேதேனும் உள்ளூர் சட்ட அமுலாக்கல் அதிகார அமைப்புக்களின் நியாயாதிக்கத்திலிருந்து விலக்களிக் கப்படுகின்றது. "*

ஈஸிலாந்துவின் தேசப்பற்றுள்ள இயக்கமானது இந்த உடன்படிக்கைக்கு எதிரான பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதுடன், இந்த உடன்படிக்கையின் 6வது வாசகமானது ஈஸிலாந்துவின் இறைமையினை விட்டுக்கொடுப்பதாக அமையுமா இல்லையா என்பதனைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றது. இந்த நிலைமையுடன் சம்பந்தப்பட்ட நியாயாதிக்க வினாக்களைச் சுட்டிக்காட்டி அபிப்பிராயப் பத்திரமொன்றை எழுதுக.

(ஆ) இராஜதந்திர உறவுகள் தொடர்பான 1961ஆம் ஆண்டின் வியன்னா சமவாயமானது முழுமையான ஆட்சிப் பரப்பொன்றாகக் கருதப்பட்டாலும், இராஜதந்திர விடுபாட்டுரிமை தொடர்பான சட்டமானது, இராஜதந்திர உறவுகள் தொடர்பான பல்வேறுபட்ட ஆட்களுக்கும் வெவ்வேறான நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பளிப்பது தொடர்பில் பல வளர்ந்துவருகின்ற சவால்களையும் தடைகளையும் நடைமுறையில் எதிர்கொண்டு வருகின்றது.

இராஜதந்திர உறவுகள் தொடர்பான 1961ஆம் ஆண்டின் வியன்னா சமவாயமானது எவ்வாறு திருத்தியமைக்கப்படலாம் என்பது தொடர்பிலான ஏதேனும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றைப் பரிந்துரைசெய்வதுடன், அண்மைய வழக்குகளுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை ஆராய்க.

5. ‘சர்வதேசப் பிணக்குகளுக்கு அமைதிவழியில் தீர்வுகாணுதல் என்பது கண்டிப்பான நெறிமுறைவிதி இயல்புடைய சர்வதேசச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடொன்றாகும். தற்பொழுது, ஐக்கிய நாடுகள் பட்டயத்தில் அது ஒழுங்குமுறையாக்கப்பட்டுள்ளதுடன், அரச நடைமுறைகளினால் அரசுகள் அதனை மேலும் வளர்ச்சியடையச் செய்துள்ளன.’

சர்வதேசப் பிணக்குகளுக்கு அமைதிவழியில் தீர்வுகாண்பதற்கான சர்வதேசச் சட்டக்கட்டமைப்பை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்வதுடன், மேலுள்ள கூற்றினை விளக்குக. சமகால நிகழ்வுகளின் மீது விசேட கவனஞ்செலுத்தி, பிணக்குகளுக்கு அமைதிவழியில் தீர்வுகாணுகின்ற வழிவகைகள் தொடர்பில் பொருத்தமான உதாரணங்களைச் சுட்டிக்காட்டி உமது விடையினை உறுதிசெய்க.

6. றோமியோ என்ற அரசானது ஜுலியட் என்ற அரசுடன் ‘செயார்’ என்ற பெயருடைய இரு தரப்பு பாதுகாப்பு உடன்படிக்கையொன்றைச் செய்வதற்கு விரும்புகின்றது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால், றோமியோவினது ஆயுதப்படையினர் ஜுலியட் நாட்டிற்குள் முன்கூட்டிய அனுமதியின்றி எந்த நேரத்திலும் வருகைதரமுடியும் என்பதாகவும், அது ஜுலியட் நாட்டினது ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுயாதீனத்தன்மை என்பவற்றின் அத்துமீறலாகும் என்று தெரிவித்து, ‘செயார்’ உடன்படிக்கையின் குறிப்பிட்டசில ஏற்பாடுகளை சட்ட ஆலோசகர்களும் எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளும் விமர்சிக்கின்றனர்.

ஜுலியட் அரசாங்கமானது ‘செயார்’ உடன்படிக்கையில் கைகொப்பமிடுகின்ற திட்டத்தைக் கைவிடுகின்றது. அதனால் றோமியோ கோபமடைவதுடன், ஜுலியட்டின் ஆள்புலகடற் பரப்புக்கருகில் அதன் 10 போர்க் கப்பல்களை அனுப்பிவைக்கின்றது. அக்கப்பல்கள் ஏவுகணைப் பரிசோதனைகளில் ஈடுபடுவதுடன், ஆழ்கடலை நோக்கி சில ஏவுகணைகளையும் வீசுகின்றன. றோமியோவினது போர்க்கப்பல்களின் மீது குண்டுவீசுமாறு ஜுலியட்டின் இராணுவ இணைக்கட்டளையதிகாரி விமானப்படைக்குக் கட்டளையிடுகின்றார். பல்வேறு ஆளில்லா விமானங்களின் தாக்குதலினால் ஐந்து போர்க்கப்பல்கள் சேதமடைகின்றன. பிராந்தியத்தின் அமைதியையும் பாதுகாப்பையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை விரும்புகிறது. ஆயினும், றோமியோவுக்கும் ஜுலியட்டுக்கும் இடையிலான சண்டைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பாதுகாப்பு பேரவையின் தலைவருக்கு அபிப்பிராயமொன்றை எழுதுவதற்கு நீர் வேண்டப்பட்டால், உம்முடைய வாதங்களை நீர் எவ்வாறு கட்டமைப்புச் செய்வீர்? உமது அபிப்பிராயத்திற்கு ஆதரவளிக்கின்றதான பொருத்தமான சட்ட ஏற்பாடுகள், வழக்குச் சட்டம், பேரவையினால் ஆக்கப்பட்ட முன்னைய தீர்மானங்களிலான உதாரணங்கள் மற்றும் நாடுகளின் அதேபோன்ற நிலைமைகள் என்பவற்றை உள்ளடக்குக.

7. ‘சினமோனிக்கா’ என்ற அரசானது ‘புளு ஓசானியா’ என்ற பிராந்தியத்தில் அமைந்திருப்பதுடன், 2019ஆம் ஆண்டிற்கான பிராந்திய ரக்பி ஆட்ட கிண்ணத்துக்கான போட்டித்தொடரை ஏற்று நடாத்துகின்றது. புளு ஓசானியா பிராந்தியத்தின் ஏழு அணிகள் சினமோனிக்காவை வந்தடைகின்றன. ஜின்கோர்ன் என்ற நாட்டு ரக்பி அணியானது, சாதுஸ்தி என்ற பிராந்தியத்தின் மிதவாத குழுவொன்றைச் சேர்ந்த ‘பீஸ்’ எனும் வழிபாட்டாளர்களை உள்ளடக்கியுள்ளது. சாதுஸ்தியைச் சேர்ந்த அடிப்படைவாதக் குழுவான ‘சமாஜட்’ என்பது, SISI என்ற பெயருடைய சர்வதேசப் பயங்கரவாத அமைப்பொன்றினது மறைமுகத்தூண்டுதலினால், 2019ஆம் ஆண்டிற்கான பிராந்திய ரக்பி ஆட்ட கிண்ணத்துக்கான போட்டித்தொடரின் தொடக்கத் தினத்தன்று பல குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு திட்டமிடுகின்றது. அனைத்து அணிகளுக்கும் ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளன. தொடக்கத்தினத்தன்று, ஜின்கோர்ன் அணி தங்கியிருந்த விடுதியின் உணவுச்சாலையில் முதலாவது குண்டு வெடிக்கின்றது. அக்குண்டு வெடிப்பின்போது, அந்த உணவுச்சாலையில் காலையுணவை அருந்திக்கொண்டிருந்த பல விளையாட்டுவீரர்களில், சம்பவ இடத்திலேயே இரண்டு விளையாட்டு வீரர்கள் கொல்லப்படுவதுடன், மற்றைய மூன்று விளையாட்டு வீரர்கள் கடுமையாகக் காயமடைந்தது நிரந்தரமான அங்கவீனத்துக்கும் உள்ளாகின்றனர். தொடக்கதின விழாக்கள் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த இடமான விளையாட்டரங்கிற்குள் மற்றொரு குண்டு வெடிப்பதுடன், முந்நூற்றுக்கும் அதிகமான உள்நாட்டவர்களும் அப்பிராந்தியத்தின் ஐம்பது வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலுக்கு சமாஜட் பொறுப்புக்கோருவதுடன், அவர்களின் சமய சிந்தனைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சமாஜட் குழு செய்த குண்டுவெடிப்பை அதனது சர்வதேச மறுபக்க அமைப்பானது ஆதரவளிக்கின்றது. ஜின்கோர்னின் உணர்வுகளைப் புண்படுத்துகின்றதான, பீஸ் மற்றும் சமாஜட் என்பவற்றினது சமயஞ்சார் சிந்தனைகள் தொடர்பில் பாதகமாக கருத்துக்களை சினமோனிக்காவின் காவல்துறை பிரதம அதிகாரி தெரிவிக்கின்றார். இந்தத் தாக்குதல்களின் சாத்தியப்பாடு தொடர்பாக, சினமோனிக்காவினது அரசாங்கத்துக்கு சினமோனிக்காவின் உளவுத்துறை முகவர்கள் முன்கூட்டியே அறிவித்திருந்ததாக ஊடக அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

மேலுள்ள தாக்குதல்களின் விளைவாக அது எதிர்நோக்கியுள்ள உடலியல் மற்றும் உணர்வுரீதியான இன்னல்களுக்கான இழப்பீட்டைக் கோருவதற்கு ஜின்கோர்ன் விரும்புகின்றது. நீர் சினமோனிக்காவின் வெளிநாட்டு விவகார அமைச்சின் சட்ட ஆலோசகராவீர் என்று கருதிக்கொள்க. உமது சட்ட அபிப்பிராயப் பத்திரத்தை அமைச்சரவைக்கு எழுதுக.

****************************